**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் : 121** **நாள்: 24.08.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம்–2018 நடைமுறைபடுத்த உரிய படிவத்தை பூர்த்தி செய்து அளிக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**=====**

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம்–2018 நடைமுறைப்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சி பொன்விழா கட்டிடத்தில் 29.08.2018 முதல் 28.09.2018 வரை மருத்துவ காப்பீட்டு திட்டத்திற்கான படிவத்தை பூர்த்தி செய்து அளிக்க வேண்டும்.

அதன்படி, பஞ்சாப் நேஷனல் வங்கி, ஆந்திரா வங்கி, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி மற்றும் யூனியன் பேங்க் ஆப் இந்தியா ஆகிய வங்கிகளின் மூலமாக ஓய்வூதியம் பெறும் அனைத்து ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் 29.08.2018 மற்றும் 30.08.2018 ஆகிய இரு நாட்களில் படிவங்களை பூர்த்தி செய்து அளிக்க வேண்டும்.

இந்தியன் வங்கி மூலமாக ஓய்வூதியம் பெறும் 31.12.2000ம் ஆண்டு வரை ஓய்வு பெற்ற / காலமான ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் 31.08.2018, 03.09.2018 மற்றும் 04.09.2018 ஆகிய நாட்களிலும், 01.01.2001 முதல் 31.12.2010 வரை ஓய்வு பெற்ற / காலமான ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் 05.09.2018, 06.09.2018 மற்றும் 07.09.2018 ஆகிய நாட்களிலும், 01.01.2011க்கு பிறகு ஓய்வு பெற்ற / காலமான ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் 10.09.2018 மற்றும் 11.09.2018 ஆகிய நாட்களிலும் படிவங்களை பூர்த்தி செய்து அளிக்க வேண்டும்.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலமாக ஓய்வூதியம் பெறும் 31.12.2000ம் ஆண்டு வரை ஓய்வு பெற்ற / காலமான ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் 12.09.2018, 14.09.2018 மற்றும் 17.09.2018 ஆகிய நாட்களிலும், 01.01.2001 முதல் 31.12.2010 வரை ஓய்வு பெற்ற / காலமான ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் 18.09.2018, 19.09.2018 மற்றும் 20.09.2018 ஆகிய நாட்களிலும், 01.01.2011க்கு பிறகு ஓய்வு பெற்ற / காலமான ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் 24.09.2018 முதல் 28.09.2018 வரை உள்ள நாட்களிலும் படிவங்களை பூர்த்தி செய்து அளிக்க வேண்டும்.

ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் அனைவரும் அசல் ஓய்வூதிய புத்தகம், ஆதார் அட்டையுடன் குடும்ப ஓய்வூதியதாரர்கள் தங்களது மார்பளவு 2 புகைப்படம், ஓய்வூதியதாரர் தங்களது கணவர்/ மனைவியுடனான 2 மார்பளவு புகைப்படம், குடும்ப ஓய்வூதியதாரர் தங்களது வயது குறித்த ஆவணத்தின் 2 நகல்கள் மற்றும் ஓய்வூதியதாரர் தங்களது மற்றும் கணவர்/ மனைவி வயது குறித்த ஆவணங்களை கொண்டு வரவேண்டும்.

மேலும், மிகவும் வயது முதிர்வினால் நேரில் வர இயலாத ஓய்வூதியதாரர்கள் www.chennaicorporation.gov.in என்ற இணையதளத்திலோ, அல்லது தனி நபரை நேரில் அணுகி படிவங்களை பெற்றுக் கொண்டு பூர்த்தி செய்து தகுந்த ஆவணங்களுடன் 25.09.2018க்குள் அளிக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**